மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.08/2024
அ.வ.எண்.19/2023

1. பழனிசாமி
2. பாக்கியம்
3. மங்கம்மா
4. ராஜி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. கணேசன்
2. ஜோதிபால் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 20.12.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.கோபிநாத் மற்றும் திருமதி.M.அபிநயா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 04.02.2023ம் தேதி காலை 10 மணியளவில் மனுதாரர்களின் ஆட்சேபனையை பொருட்படுத்தாது, எதிர்மனுதாரர்கள் தாவா 2வது அயிட்ட சொத்திலுள்ள மனுதாரர்களின் வீட்டிற்கு வெளியே, மனுதாரர்கள் தங்களது வீட்டிற்குள் நுழைய முடியாதவாறு, மதில்சுவர் எழுப்பிவிட்டனர். அதனால் மனுதாரர்கள்

தங்களுடைய வீட்டிற்குள் சென்று வர மிகவும் சிரமப்படுகிறார்கள். மேற்படி மதில்சுவரை அகற்றாவிட்டால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும்.

(ii) அவ்வாறு தாவா 2வது அயிட்ட சொத்தில் உள்ள மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை தடுத்து மதில்சுவர் கட்ட எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. அதனால் அசல் வழக்கில் மேற்படி மதில்சுவரை இடிக்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்நிலையில் தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்களால், மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை மறைத்து மதில்சுவர் கட்டப்பட்டுள்ளதை நிரூபிக்க வேண்டியும், நீதிமன்ற ஆணையரை நியமித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் உதவியுடன் தாவா சொத்துக்களை அளந்து, அதன் பௌதீக தன்மைகள் மற்றும் அளவுகளை குறிப்பிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. மனுதாரர்கள் அனுபவிக்கும் பாதையை மறைத்து அவர்கள் தங்களது வழித்தடத்தை பயன்படுத்த முடியாதவாறு எதிர்மனுதாரர்களால் மதில்சுவர் கட்டப்பட்டுள்ளது என்பது தவறான சங்கதியாகும். கோவில் நிலத்தை சுற்றி 1அடி உயரத்திற்கு கருங்கற்களால் பேஸ்மெண்ட் போடப்பட்டு, அத்து காட்டப்பட்டுள்ளது. மனுதாரர்களின் பழைய வீடு கிழக்கு வாசல் வைத்து கட்டப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு அவர்கள் நிலத்திற்கு கிழபுறத்தில் சாலை வசதி உள்ளது. தற்போது 2021ம் ஆண்டு மனுதாரர்கள் புதிதாக கட்டிய வீட்டிற்கு வேண்டுமென்றே கோவில் நிலத்தின் பேஸ்மெண்ட் கற்களை பிடிங்கி எடுத்துவிட்டு, அதில் வாசல் படிகட்டு கட்டியுள்ளார்.

(ii) ச.எண்.612/2C3 ன் பட்டா வருவாய் துறையால் மனுதாரர்களின் பெயருக்கு தவறாக வழங்கப்பட்டுள்ளதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு திருவிழாக்காலங்களில் ஊர் பொதுமக்கள் பொங்கல் வைப்பதற்கு மனுதாரர்கள் இடையூறு செய்ததால், கோவிலை சுற்றி கோவில் கமிட்டியால் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது. அதுவும் மனுதாரர்களின் வீட்டு வாசலை விட்டுவிட்டு தான் காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கோவில் சொத்தை அபகரித்து துர்லாபம் அடையும் நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது தெரியவருகிறது. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், சா.சா.ஆ.1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 04.02.2023 ம் தேதி காலை 10 மணியளவில் மனுதாரர்களின் ஆட்சேபனையை பொருட்படுத்தாது, எதிர்மனுதாரர்கள் தாவா 2 வது அயிட்ட சொத்திலுள்ள மனுதாரர்களின் வீட்டிற்கு வெளியே, மனுதாரர்கள் தங்களது வீட்டிற்குள் நுழைய முடியாதவாறு, மதில்சுவர் எழுப்பிவிட்டனர் என்றும், அதனால் மனுதாரர்கள் தங்களுடைய வீட்டிற்குள் சென்று வர மிகவும் சிரமப்படுகிறார்கள் என்றும், மேற்படி மதில்சுவரை அகற்றாவிட்டால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், கூறியுள்ளது தெரியவருகிறது.

(ii) அவ்வாறு தாவா 2வது அயிட்ட சொத்தில் உள்ள மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை தடுத்து மதில்சுவர் கட்ட எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதனால் அசல் வழக்கில் மேற்படி மதில்சுவரை இடிக்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும், இந்நிலையில் தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்களால், மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை மறைத்து மதில்சுவர் கட்டப்பட்டுள்ளதை நிரூபிக்க வேண்டியும், நீதிமன்ற ஆணையரை நியமித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் உதவியுடன் தாவா சொத்துக்களை அளந்து, அதன் பௌதீக தன்மைகள் மற்றும் அளவுகளை குறிப்பிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அனுபவிக்கும் பாதையை மறைத்து அவர்கள் தங்களது வழித்தடத்தை பயன்படுத்த முடியாதவாறு எதிர்மனுதாரர்களால் மதில்சுவர் கட்டப்பட்டுள்ளது என்பது தவறான சங்கதி என்றும், கோவில் நிலத்தை சுற்றி 1அடி உயரத்திற்கு கருங்கற்களால் பேஸ்மெண்ட் போடப்பட்டு, அத்து காட்டப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்களின் பழைய வீடு கிழக்கு வாசல் வைத்து கட்டப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்களுக்கு அவர்கள் நிலத்திற்கு கிழபுறத்தில் சாலை வசதி உள்ளது என்றும், தற்போது 2021ம் ஆண்டு மனுதாரர்கள் புதிதாக கட்டிய வீட்டிற்கு வேண்டுமென்றே கோவில் நிலத்தின் பேஸ்மெண்ட் கற்களை பிடிங்கி எடுத்துவிட்டு, அதில் வாசல் படிகட்டு கட்டியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் ச.எண்.612/2C3ன் பட்டா வருவாய் துறையால் மனுதாரர்களின் பெயருக்கு தவறாக வழங்கப்பட்டுள்ளதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு திருவிழாக்காலங்களில் ஊர் பொதுமக்கள் பொங்கல் வைப்பதற்கு மனுதாரர்கள் இடையூறு செய்ததால், கோவிலை சுற்றி கோவில் கமிட்டியால் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றும், அதுவும் மனுதாரர்களின் வீட்டு வாசலை விட்டுவிட்டு தான் காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் கோவில் சொத்தை

அபகரித்து துர்லாபம் அடையும் நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்துகளுக்கு செல்லும் தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர்கள் எவ்விதத்திலும் தடுக்கக் செய்யக்கூடாது என வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி தடவழியை மறைத்து கடந்த 04.02.2023 ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதால் மேற்படி காம்பவுண்ட் சுவற்றை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர்கள்/ வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.612/2C3 ன் பட்டா வருவாய் துறையால் மனுதாரர்களின் பெயருக்கு தவறாக வழங்கப்பட்டுள்ளதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு திருவிழாக்காலங்களில் ஊர் பொதுமக்கள் பொங்கல் வைப்பதற்கு மனுதாரர்கள் இடையூறு செய்ததால், கோவிலை சுற்றி கோவில் கமிட்டியால் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றும், மனுதாரர்களுக்கு அவர்கள் நிலத்திற்கு கிழபுறத்தில் சாலை வசதி உள்ளது என்றும், மேற்படி காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டதால் மனுதாரர்களுக்கு எவ்வித இடையூறும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை ஒருங்கே கருத்தில் கொள்கையில், ச.எண்.612/2C3 ல் மனுதாரர்களின் வீடு அமைந்துள்ளதாகவும், மேற்படி வீட்டிற்கு செல்வதற்கு ச.எண்.612/2C1 ல் அமைந்துள்ள மாரியம்மன் கோவிலின் முன்பாக தடவழி பாத்தியம் மனுதாரர்களுக்கு உள்ளது என்றும், மேற்படி தடவழி பாத்தியத்தை எதிர்மனுதாரர்கள் தடுத்து இடையூறு செய்வதாக கூறி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர்களால் கடந்த 30.01.2023 ம் தேதியில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், கடந்த 04.02.2023 ம் தேதியில் எதிர்மனுதாரர்களால் மேற்படி ச.எண்.612/2C1 ல் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தடவழியை மறைத்து காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுவிட்டதாகவும்,

மேற்படி மதில்சுவரை அகற்ற செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்கள் அசல் வழக்கில் திருத்தப்பாடுகள் செய்துள்ளது தெரியவருகிறது.

(vii) அதேபோல் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அவ்வாறு ச.எண்.612/2C1ல் மதில்சுவர் கட்டப்பட்டுள்ளது உண்மை என்றும், ஆனால் மனுதாரர்களுக்கு மேற்படி நிலத்தில் தடவழி எதுவும் இல்லை என்றும், மனுதாரர்களின் வீட்டிற்கு கிழபுறமாக அவர்களுக்கு தடவழி உள்ளது என்றும், அதைத்தான் மனுதாரர்கள் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையில், மனுதாரர்கள் தங்களது வீட்டிற்கு செல்லும் தடவழியை மறைத்து, எதிர்மனுதாரர்கள் காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டதாகவும், அதனால் மேற்படி காம்பவுண்ட் சுவரை அகற்ற கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் நிலையில், மேற்படி சங்கதிகளை ஐயமற நிரூபிக்க வேண்டிய நிரூபண சுமை மனுதாரர்களையே சார்ந்ததாகும். எனவே மேற்படி சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) மேலும் மனுதாரர்கள் கூறுவது போல் ச.எண்.612/2C1ல் தடவழி ஏதேனும் செல்கிறதா? என்பது குறித்தும், அவ்வாறு தடவழி உள்ளதெனில், அதன் நீள, அகலங்கள் குறித்தும், மேற்படி சர்வே எண்ணில் எதிர்மனுதாரர்களால் கட்டப்பட்டுள்ள காம்பவுண்ட் சுவர் மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை தடுக்கும் வகையில் அமைந்துள்ளதா? என்பது குறித்தும், அவ்வாறு உள்ளதெனில், மேற்படி தடவழியில் எத்தனை அடி நீள, அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது? என்பது குறித்தும், மேலும் மனுதாரர்களின் வீட்டிற்கு செல்ல எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் மேற்படி வீட்டின் கிழபுறத்தில் தடவழி ஏதேனும் உள்ளதா? என்பது குறித்தும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் உதவியுடன் தாவா சொத்துக்களை பார்வையிட்டு, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனைக்கு எளிமையாகவும், இறுதியாகவும் தீர்வு காண இயலும் என்பதால், தாவா சொத்துக்களை அளந்து, அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதால், இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டும், திரு.V.ரணதேவ் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு, தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில், பரிசீலனை செய்து, ச.எண்.612/2C1 லிருந்து தாவா 2வது அயிட்ட சொத்திலுள்ள மனுதாரர்களின் வீட்டிற்கு தடவழி ஏதேனும் செல்கிறதா? என்பது குறித்தும், அவ்வாறு தடவழி உள்ளதெனில், அதன் நீள, அகலங்கள் குறித்தும், மேற்படி சர்வே எண்ணில் எதிர்மனுதாரர்களால் கட்டப்பட்டுள்ள காம்பவுண்ட் சுவர் மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை தடுக்கும் வகையில் அமைந்துள்ளதா? என்பது குறித்தும், அவ்வாறு உள்ளதெனில், மேற்படி தடவழியில் எத்தனை அடி நீள, அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது? என்பது குறித்தும், மேலும் மனுதாரர்களின் வீட்டிற்கு செல்ல எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் மேற்படி வீட்டின் கிழபுறத்தில் தடவழி ஏதேனும் உள்ளதா? என்பது குறித்தும், மேற்படி சொத்துக்களை அளந்து, அவற்றின் பௌதீக அமைப்புகள், அளவுகளுடன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.10,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையருக்கு நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் குறித்துரைக்கும் தேதியில் தரப்பினர்களும், அவர்தம் வழக்கறிஞர்களும் தவறாமல் ஆஜராகி நீதிமன்ற கட்டளையை நிறைவேற்ற தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் எனவும், நீதிமன்ற ஆணையர் காலதாமதமின்றி விரைவாக அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஆவண செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.04.03.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.29 17:23:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 03.04.2023 வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் | நகல் |
| | அஞ்சலக ரசீதுகள்(5) | அசல் |
| ம.சா.ஆ.2 | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (5) | அசல் |
| ம.சா.ஆ.3 | 22.01.2023 மனு ரசீது | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.4 | 05.02.2023 புகார் மனு | நகல் |
| | 18.02.2023 புகார் மனு | நகல் |
| ம.சா.ஆ.5 | புகைப்படங்கள் (6) | அசல் |
| ம.சா.ஆ.6 | குறுந்தகடு | அசல் |
| ம.சா.ஆ.7 | 14.02.2024 பட்டா எண்.2955 ன் கணிணி பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.8 | சிட்டாக்கள்(2), அ பதிவேடு | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.9 | புல வரைபடம் | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.10 | அ பதிவேடுகள் (2) | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.11 | அடங்கல் கணக்குகள் (2) | சான்றிட்டநகல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 17.01.1957 கிரயப்பத்திரம் | பதிவுநகல் |
| எ.ம.சா.ஆ.2 | 13.02.2023 வில்லங்க சான்றிதழ் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.3 | 14.02.2023 வில்லங்க சான்றிதழ் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.4 | 25.01.2023 மனு ரசீது | சான்றிட்டநகல் |

<u>சாட்சி தரப்பு சான்றாவணம்:–</u>

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | அடங்கல் கணக்குகள் (2) | சான்றிட்டநகல் |

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.29 17:23:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.